செ.வெ. எண்: 535 நாள்: 11.09.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (11.9.2012) தலைமைச் செயலகத்தில், 2012 – 2013ஆம் கல்வியாண்டில் 11–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தமிழகத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில், மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமுதாயங்களைச் சார்ந்த மாணவிகள் அனைவருக்கும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2001 – 2002–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பின்பு 2005–2006–ஆம் ஆண்டில் மாணவர்களுக்கும் இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விரிவுபடுத்தப்பட்டது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் அனைத்துப் பிரிவு மாணவ, மாணவியர்களுக்கும் மிதிவண்டிகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு மாணவ, மாணவியர்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

கடந்த 2011–2012ஆம் கல்வியாண்டில் 179 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவில் 2,77,788 மாணவர்களுக்கும் 3,44,380 மாணவியர்களுக்கும் என மொத்தம் 6,22,168 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று, நடப்பு கல்வியாண்டில் 196 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் 2,81,861 மாணவர்களுக்கும் 3,49,418 மாணவியர்களுக்கும் என மொத்தம் 6,31,279 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன. அதன்படி, இந்தக் கல்வியாண்டில் 11–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கித் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து மிதிவண்டிகளைப் பெற்றுக்கொண்ட மாணவ, மாணவிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்,

சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களில் மாநில அளவில் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கப் பரிசுகள் வழங்கும் திட்டமும் ஒன்றாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் மாநில அளவில் 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு முறையே 50 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்திலும், 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு முறையே 25 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்திலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஒவ்வொரு பிரிவிலும் மாணவர்களுக்குத் தனியாகவும், மாணவிகளுக்குத் தனியாகவும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அதன்படி, 2012-ஆம் ஆண்டு நடைபெற்ற 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 93 மாணவ, மாணவிகளுக்கு 18 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.